கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி. க. } சௌமிய௵ மாசி௴ { பகுதி கக.

இளையான்குடி மாறநாயனார்.

—:o:—

சரியை கிரியையோக ஞான மென்னும் நான்கு பாதங்களிலே நின்று முத்திபெற்ற மெய்யடியார்களுட் சிறந்த தனியடியார்கள் அறுபத்துமூவருள்ளே ஒருவராகிய இளையான்குடி மாறநாயனார், இல்லறத்திலிருந்து, சிவனடியார்களையே பரம் பொருளெனக் கொண்டு, சைவாகம விதிப்படி மகேசுவர பூசையை வழாது செய்து முத்தி பெற்றவரென்பது யாவருமறிந்த தொன்றே.

"அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்து
ளதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்று
ளதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
யதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய்" எனவும்,

"பறமலி யுலக வாழ்க்கையே வேண்டும் வந்துநின் னன்பர்தம் பணியாம் அறமது கிடைக்கின்" எனவும்,

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டனையேல்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே" எனவும், வரும் அற்புதத் திருவாக்குகளின் படியே இந்நாயனார் பெருஞ் செல்வத்துடனுற்ற காலத்து அடியார் பூசையை முட்டின்றி நடாத்தி வருங்கால், மன்றுளாடிய வள்ளலாரருளால் செல்வங் குன்ற வறுமை வந்துற்றது. "மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை தானம்

தவம் உயர்ச்சி தாளாண்மை"யாதிய எல்லா நலத்தையுங் கெடுக்கும் பொல்லா வறுமையுற்ற காலத்தும் மனம் சுருங்காது முன்போலவே அடியார் பூசை செய்துவந்த இவரது பத்திமைத் திட்பம் மிகப் பெரிதா மென்க. இதனை

"இன்னவாறு வளஞ்சுருங்கவு மெம்பிரானினை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சுருங்குத லின்றியுள்ளன மாறியும்
தன்னைமாறி யிறுக்கவுள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னைமாறில் திருப்பணிக்கண் முதிர்ந்த கொள்கைய ராயினார்"

என்னும் அருண்மொழித் தேவர் திருவாக்கா லறியலாம். இவரும் இவரது அருமை மனைவியாரும் ஒருநாள் முழுதும் தங்கட்கு உண வின்றிப் பட்டினியா யிருக்குங்கால் நடுராத்திரியில் பரமசிவனே ஒரு அடியாராகி எழுந்தருளி, இவர்க்கு நல்விருந்தாக, அகமு முகமு மலர்ந்து ஆசனத்திருத்தி, மழையிடைநனைந்து வயலிடைப் புகுந்து முளைத்துள்ள நெற்களைக் கொண்டுவந்து, தமது தர்ம பத்தினியார் கையிற்கொடுத்துக் கூரையின் அலகுகளை யறுத்து எரிகருவியாக்கி, கீரை முளைகளைப் பறித்துக் கறியாக்க நல்கினர். அருந்ததியிற் சிற ந்த அவ்வம்மையாரும் முளை நெற்களை வறுத்துக் குற்றி அரிசி யாக்கி நல்லுணவு சமைத்தனர்.

வந்து படுத்துறங்கிய அதிதியை யடுத்து "ஐயனே! அமுது செய்ய எழுந்தருள வேண்டுமென் றெழுப்ப ஒரு சோதியாயெழுந்த பரமேசுவரர் இடபாரூடராகிக் காட்சிகொடுத்து இந்நாயனாரையும் பத்தினியாரையும் குபேரனும் பணிசெய்யத்தக்க சிவலோகத்திற் சேர்த்தருளினர். இத்தகைய மெய்த்தொண்டரது குலமும் ஊரும் பேரும் விளங்குவனவாயினும் இளையான்குடி என்னும் அப்புண்ணி யப்பதி இன்ன நாட்டிலுள்ளது என்று பெரிய புராணத்தாலாவது வேறு நூல்களாலாவது அறிதற் கரிதாகின்றது.

மதுரை ஜில்லாவில் பரம்பக்குடிக்குச் சற்று வடகீழ்த்திசை யில் 7 மயில் தூரத்தில் இளையான்குடி என்ற ஓர் வளநகர மிருக் கின்றது. இதுவேமேற்குறித்த நாயனார் வசித்திருந்த புண்ணியபுரி யென்ப ரொருசாரார். வேறு சிலர் இளையான்குடி யென்பது சோழ

நாட்டிலுளது எனக் கூறுவர். மற்றுஞ் சிலர் அப்பெயர் நகரம் இப்போது யாண்டுமில்லை யென்பர். இவ்வாறு பலபடக்கூறுவாராயினும், மதுரை ஜில்லாவிலுள்ள மேலே காட்டிய இளையான்குடியே இந்நாயனார் நகரமெனற்குச் சில காரணங்களுள்ளன. (1) இவ்வூரிலே இம்மாற நாயனார் குடியிற் றுபத்தார்களான வம்சத்தார்கள் பல்லோர் வசிக்கின்றனர். (2) முளைவாரி யமுதளித்த நாற்றங்கால் என்ற பெயரால் வயல் நிலமுமுளது. இப்பெயர் 1000ஆண்டுகட்கு முற்பட்டே வழங்கி வருகின்றதாம். (3) இம்முளைவாரியமுதளித்த நாற்றங்காலுக்கு அக்கால முதல் இன்றுவரை அரசர்கள் இறைப்பொருள் வாங்காது சர்வமானியமாகவே விட்டிருக்கின்றார்கள். (4) இவ்வூரில் மிகப் பழைய சிவாலயமு முளது. இது இப்போது மிகவும் கிலமாகியுளது. (5) இந்நாயனார்க்கு மாறன் என்னும் பாண்டி மன்னர் பெயர் வழங்குவது நன்கு கவனிக்கற்குரியது. இத்திருப் பெயரால் இம்மாற நாயனார் திருநகரம் பாண்டி நாட்டிலே யிருக்கவேண்டுமென்றிப் பிற நாட்டகத் திருத்தல் அத்துணைப் பொருத்தமு மன்றே. இந்நகரத்துச் சிவாலயத்தின் கண்ணே சில சிலாசாசனங்களுமுளவாம். அச்சிலா சாசனங்களையும் ஆராய்ந்து அச்சிவாலயத்தையும் புதுக்கி வைப்பது அந்நகரிலுள்ள சைவசமயிகளான கனதனவான்களின் கடமையேயாம். சிவநேயச் செல்வர்கள் கவனிப்பார்களாக.

பத்திராதிபர்.

பர்த்ருஹரி நீதிசதகம்

10-வது கர்மப்படலம்.

92 'தேவர்களைவணங்குவோம்' என்றாலோஅவர்களேபாவி விதிக்குட்பட்டவர்களாயிருக்கின்றனர். 'விதியையேவணங்குவோம்' என்றால், 'கர்மத்தால்' திட்டம் செய்யப்பட்ட பலனைத்தான் விதி கொடுக்கக்கூடியதா யிருக்கின்றது. இவ்விதம், (நாமடையும்) பலனெல்லாம் 'கர்ம' ஆதினமா யிருக்குமாகில், மற்ற தேவர்களாலாவதென்ன? விதியால்தானாவதென்ன? ஆகையால் 'கர்மத்தை'யே வணங்குவோம். கர்மத்தைக்காட்டிலும் விதி (எந்தவிதத்திலும்) வலுவுள்ளதன்று.

93. இப்ரஹ்மாண்ட மெனும் பானைக்குள்(ளிருந்து வேலை செய்யும்) ஓர்குயவனாக ப்ரஹ்மா எதனால் நியமிக்கப்பட்டிருக்கின்றாரோ, எதனால்,மஹாவிஷ்ணு ‘தசாவதார’மெனும் மகாசங்கடமான நுழைகாடுகளுக்குள் அகப்பட்டுக்கொண்டாரோ, எதனால் பரமசிவன் மண்டை யோட்டைக்கையிலேந்திப் பிச்சையெடுத்து ஜீவிக்கின்றாரோ, எதனால் சூரியன் எப்பொழுதும் ஆகாசத்திலேயே யலைன்றாரோ, அப்படிப்பட்ட‘ கர்ம’த்துக்கே வந்தனம்.

94. துஷ்டரை நல்லோராகவும், மூடர்களை வித்வான்களாகவும், பகைவரை நண்பராகவும், எட்டாததைக் கிட்டினதாகவும், ஆலகால விஷத்தையும் அமிருதமாகவும், எது நிமிஷநேரத்தில் செய்யக்கூடியதோ, அப்படிப்பட்ட உயர்ந்த ‘ஸத்கர்மத்தை’ வேண்டிய பலனையடையும் பொருட்டுப், பூஜைசெய்(கைக்கொள்). புத்திமான்கள்! அதிக கஷ்டமான(ஸத்வ, ரஜஸ், தமஸ்என்றும்முக்) குணங்களில் வீணாக ஆசை கொள்ளாதேயுங்கள்.

95. நீபூர்வத்தில் செய்த நல்லகர்மமானது இருக்கும் வரை அழகான மாளிகைகளையும், உல்லாஸமான யுவதிகளையும், வெண்குடையால் பிரகாசிக்கின்ற ராஜ்யசம்பத்துமுதலானவைகளையும் நீ அனுபவிக்கின்றாய். உன்நல்வினை யொழிந்து விட்டாலோ, காதலர்கள் ப்ரணயகலகஞ்செய்து உல்லாஸமாய் விளையாடுகையில், நால் அறுந்த முத்துமாலை (யிலுள்ளமுத்துக்கள்)போல், மேற்கூறியசம்பத்துகளெல்லாம் திடீரென்று சிதறிவிடுகின்றன. (சிதறுவதைப்) பார்க்கலாம்.

96. எக்காரியமாயினும் அதைச்செய்யமுயலும் புத்திமான், அதுநல்லதோ கெட்டதோஎன்பதையும், அதனாலுண்டாகக்கூடிய பயனையும் நன்றாய் கவனிக்கவேண்டும்; ஏனென்றால் அதிக அவசரமாகச்செய்த காரியங்களின் பயன் கடைசி வரை மனதை ஈட்டிபோலப் புண்படுத்திக்கொண்டே யிருக்கின்றது.

97. இக்கர்ம பூமியையடைந்தும் ஒருவன், தன்துர்ப்பாக்கியத்தால், நற்கர்மங்களைச்செய்யாதிருப்பானாகில், அவன், சந்தனக்கட்

டை யெரித்து வைரீயப்பானையில் எள்ளுப்பதரைச் சமைப்பவனு கவும், எருக்கிலைப்பஞ்செடுப்பதற்காக, பொற்கலப்பை கொழுக்களால் தரையை யுழுகின்றவனுகவும், கர்ப்பூரச்செடிகளைப் பிடுங்கிக் கோத்ர வச்செடிகளைச் சுற்றி வேலி கட்டுபவனுகவும் ஆகிருன்.

98. தேகத்தின் அழகிய அமைப்பாவது, குலமாவது, ஒழுக்கமாவது, கல்வியாவது கஷ்டப்பட்டுச்செய்யும் ஊழியமாவது ஒருவனுக்குவேண்டிய பலனைக்கொடுப்பதில்லை. ஆனுல் முன்செய்த நல்வினைகளால் சேர்த்துவைக்கப்பட்ட நல்ல பாக்கியங்கள்தான், சரியான காலத்தில் மரங்கள்போலப் பலன்தருகின்றன.

99. கடலில் (தண்ணீரில்) மூழ்கினுலும், மேருமலையுச்சி யேறினுலும் போர்க்களத்தில் பகைவரை வென்றுலும், வர்த்தகம் வியவசாயம் சேவகம் முதலான கலைகளெல்லாம் கற்றுணர்ந்தாலும், அதிகப்பிரயாசப்பட்டுப் பறவைபோல் ஆகாயமெங்கும்பறந்தாலும், ஒருவன் அடையக்கூடியதையடையவுமாட்டான், கர்மவசத்தால் கிடைக்கக்கூடியதற்கு அழிவுமில்லை.

100. வனத்திலும், போர்க்களத்திலும், பகைவர், தண்ணீர் நெருப்பு-இவைகள் மத்தியிலும், பெருங்கடலிலும் மலையுச்சியிலும், (எங்கிருந்தாலும்,) தூங்குகையிலும், அஜாக்கிரதையா யிருக்கையிலும், ஆபத்து நேர்ந்த விடத்தும், ஒருவன் முன் செய்த புண்ய கர்மங்கள் அவனை ரக்ஷிக்கின்றன.

101. எந்த மனிதனுக்கு, தான் முன் செய்த நல்வினைகளதிகமாயிருக்கின்றனவோ, அவன் விஷயத்தில், பயங்கரமான காடு பிரதானமானபட்டணமாய் விடுகின்றது; எல்லா ஜனங்களும் அதனுடைய ஜனங்களாகின்றுர்கள், பூமியெல்லாம் உயர்ந்த இரத்நங்களுடன் கூடிய சுரங்கங்கள் நிறைந்ததாகவும் ஆகின்றது.

பர்த்ருஹரி நீதிசதகம் முற்றிற்று.

R. சேதுநாராயணசர்மா BA, BL.

தாயினுந் தந்தைஎளியரல்லர்.

"மகனறிவு தந்தையறிவு" என்னு முண்மையால் ஒவ்வொரு மைந்தனும் தந்தையின் அம்சமாகவேயிருக்கிறான்" என்பது ஆன்றோர் கொள்கை. ஆனால் மனிதரல்லாத இதர பிராணிகள் (பசும் பருவத்தின் மாத்திரம் தாயையறிந்து பற்றிநிற்கும் பசுபக்ஷியாதிகள்) தந்தையை யாண்டும் உணர்ந்தில வென்பதும் வெளிப்படை. ஆதலின் தாயோடு தந்தையைத்தெரிந்து நிற்றலே, பகுத்தறிவுள்ள மேலான மனுடரின் அறிவுச்செயல் களுட்சிறந்த தொன்று மென்பர் பெரியோர்.

இருந்தாலும், தந்தையையறியாத சில ஜாதியாரும், உலகத்திற்காணப்படுகின்றனர்.

இன்னோரன்ன ஜாதிகளின், தந்தையாயினோர் கதியோ அதோகதியாகலாமென்பதை எவராலும் மறுக்கமுடியாது. இதுநிற்க.

"இல்லறமல்லது நல்லறமன்று,,

"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்"
"ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து"

"பத்திசெய் சமய பேதப் பகுதிக்கும் பொதுவா நிற்கும்
புத்தெனு நரக நீக்கிப் பொருவரும் வீட்டை நல்கும்
உத்தம வனந்த ஞான வுருவெடுத் திலக நிற்குஞ்
சத்திய மகத்திற் பேறு தருவதில் வாழ்க்கை தானே"

என்றவிதிகளான், மேலான கிருகஸ்தாசிரமாநுஷ்டானபரர்களாகி, சுதர்மங்கள் வழுவாது சரியாக நடைபெறற்பொருட்டுத் தொன்று தொட்டுள்ளதோர் வழக்காக, சுத்தகுலத்தில் ஒத்தகுடியில் உத்தமமானதோர் கன்னிகையைத் தெரிந்தெடுத்து, விதிப்படிமணவாட்டியாகக்கொண்டு, கர்ப்பாதானாதி சத்கர்மங்களால் சுபுத்திரர்களைப் பெற்றுவாழ்தலாலே, இகபரசுகாநுபவங்களுக்கு யோக்கியராயிருக்கிற பெருமதிப்பிற்குரிய மறையோரும், வேந்தரும், வேளாளரும்,

தொழிலாளிகளெனப்பட்ட எல்லா வகுப்பினரும், மேலோர் வழக்க பழக்கங்களை ஐதிகமாய நாட்டித்துவரும் பஞ்சமாகளும், தந்தையைத் தெரிந்து கொண்ட சாதியார்களாகவே மதிக்கப்படுகிறார்களென்ப துண்மை. இவர்களைப்பொறுத்தே,

• "தந்தைதாய்ப்பேண்,, "அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்,, என்பதாதியசுருதிகள் வெளிப்பட்டன. அல்லாமலும், "மாதிருதேவோபவ; பிதிருதேவோபவ,, என்று வேத முழங்குவதாயும் கேட்கப்படுகிறது. இவ்வுண்மை பற்றி நிற்கும், ஜனசமூகங்கள், "மாதா-பிதா-குருதெய்வம்" என்னும் உணர்ச்சி மேலிட்ட ஞானப் பிரகாசத்தினாலேயே, தொன்று தொட்டுப்பெருமதிப்பிற்குரியராகக் கருதப்படுகின்றனர். அங்ஙனமாகவும்,

* "அன்னையா னவடா தைக்கு மதிகமன் னையும்பி தாவும்
முன்னையோர் தெய்வ மென்ற மொழிக்கெவர் முதன்மை பூண்டார்
பின்னொராச் சிரமத் தேகிப் பிதாவையும் வணக்கங் கொள்ளுஞ்
சந்நியா சிகளு மந்தத் தாயரைத் தொழுவ ரன்றோ"

† "தந்தைதாய் பணித்தல் செய்யுந் தவமலாற் றவமவே றில்
மைந்தருக் கெதிகளே னும் வணங்குவர் தாயைத் தந்தை
யந்தமைந் தனையே போற்றல் வேண்டுமற் றுதல் தன்னால்
சிந்தையுற் றுணரிற் றாயே தந்தையிற் சிறந்தாண் மன்னே"

• என்பதாதிய வாக்கியங்களால், தாயைக்காட்டிலுந் தந்தை சிறிது குறைந்தவராகமதிக்கப்படுகிறார்.

ஈண்டெடுத்துக் காட்டிய வாக்கியங்களுள் முன்னையது, இரண்டு உதாரணங்களுடன் "அன்னையானவள் தாதைக்கு மதிகம்" என்றறிவுறுத்திற்றாயினும், அவ்விரண்டுதாரணங்களும், பொருந்தமில் உதாரணங்களே என்பது நம்மால், பாநுவில், 6-ம் பகுதியில், (௩௬௬) பக்கத்தில், "அன்னையும் பிதாவும்" என்னுந் தலைப்பின்கீழ் நன்றாகவலியுறுத்தப்பட்டது, பின்னையதோ, உபதேசமாத்திரமாக் காணப்படுகிறது. இவைபற்றித்தானே, சைவ-வைணவ-மாத்துவ-ஸ்மார்த்த-சதாசார சத்சமயிகளின் குருமடங்களிலே ஆசிரியரா

---

* பிரபோதசந்திரோதயம். † காசிகாண்டம்.

யெழுந்தருளியிருக்கப்பட்ட சந்நியாச மூர்த்திகள் தாயைவழிபடுத லும், தகப்பனைத் தங்காலின்கீழ் வழிப்படுத்தலுமோர் வழக்காக அநுட்டித்து வருகிறார்கள்.

அந்தமட்டிலும், இவ்வநுட்டானத்திற்கு வேதசிவாகமங்களும் இடங்கொடுத்திருக்குமென்று சிலரெண்ணுகிறார்கள். வேறுசிலர் கலியுகத்தில்" சந்நியாசப்பிரதிட்டாபனாசாரியர் சங்கராசாரியர் என்றுசங்கரவிஜயஞ் சாதித்து நிற்பதால், தாய்க்கேஆதிக்கஞ்சாதிப்பது அவருடைய வழக்கமாமென்றும், உலகத்திலே காலபேதத்தால் சிலகாலத்திற்கு முன்னர்க்கொண்டு எல்லா மடாதிபதிகளு மநுட்டித்து வருகிறார்களென்றும், பேசிக்கொள்ளுகின்றனர்.
இவ்வுண்மைக்கு,

* "ஈன்றதாயினைஈன்றெடுத்திருபுயத்தணைக்கும்
ஆன்றதந்தையையரந்தைசெய்தகன்றுபோயடவி
தோன்றிமாதவந்தொடங்கினோரிவர்களைத்தொல்லை
மூன்றுதேவருமுனிவுறநிரயமுற்றிடுவார்."

† "தந்தைதாய் குரவன் மைந்தன் தனதுமா ணுக்க னிந்த
ஐந்துபேர் கடன்க ளாற்று மதுதற வாகு மல்லான்
மந்திர காவி சாத்தி மறுசன்ம மடைந்தா னேனும்
இந்தமுற் கடன்க ளாற்று னெழுநர கடைவ னன்றே,,
என்பதாதிப்பிரமாணங்களுமெடுத்துக்காட்டுகின்றனர்.

இவ்வுண்மைகளையும் உள்ளவாறுணரும் புத்திமான்கட்கே, தாயைக்காட்டிலும் தந்தை சிறியரல்ல ரென்பது புலப்படுதல் திண்ணம், இதனாலே உயர்குடி மைந்தராவா ரெனவரும், எத்தகைப் பதவிகளைப்பெற்றிருக்கினும், தாய்தந்தையரிருவரிடத்தினும், அன்புசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனரென்பது அறிஞர் சம்மதமாம். இன்னமும் விசாரிக்குமிடத்து,

" தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை,,
" தந்தை சொன்மிக்க மந்திரமில்லை,,

* உபதேசகாண்டம். † காசிகாண்டம்.

என்பனவாதிய விதிகளால், தாயை கோயில்போலவும், தந்தையைக்குருவாகவும், கொள்ளவேண்டியதுண்மையாகின்றது. இங்கே கோயிலென்பது, (கோ - இறைவன் இல்-இருப்பிடம்-) என்றுபொருள்படும் ஆதலானும்,

"காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்தம் மெய்யுரையி னிற்கும்
ஈண்டையுள தெய்வதமு மாமுகிலு மென்றால்
ஆண்டகைமை யோர்களுமவர்க்குநிக ரன்றே"

"வாள் விழிக்குல மங்கைய ரன்பர்பொற்
றாள் விளக்கிய தண்புனல் கங்கையக்
கேள்வ ரேகிளர் தேவர்கண் மூவரில்
ஆளு மெய்மை யடிகளென் றெண்ணுவார்"

என்பனவாதிய சுருதிபோதங்களாலும் கோயிலென்பது கற்புக் குலமகளாகிய அன்னை தந்தெய்வமாகிய கணவனையேஇதயாசனத் திருத்தி நிற்பதுணர்த்திற்றென் றெண்ணுக. அல்லாமலும், ஈண்டறிவுறுத்த பிரமாணத்தால், மூன்றுதேவர்களும், முகிற்குலங்களும், அவளாணை வழிப்பட்டு வேண்டியவாறநுக்கிரகித்து நிற்குமோருண்மை வெளிப்பட்டது. ஆனதுபற்றியே, "மாதிருதேவோபவ" 'தாயினிற் சிறந்த தெய்வமில்லை' 'ஈன்றாளி லென்ன கடவுளுமில்' என்பன கேட்கப்பட்டன. இவ்வாதரவுகளைக்கொண்டு தாயைத் தெய்வமென்றும் பேசுவரான்றோர். அவ்வுபசாரங்களத் தனையும் அன்னையானவள், தன் இதயாசனத்திற் குடிகொண்டுள்ள தலைவனுக்கே யர்ப்பித்துநிற்பவளன்றித்தனக்கோர் பூஷணமாக்கொள்கின்றில ளென்பது மேலோர் துணிபாம்.

(இன்னும் வரும்.)

த. ஆறுமுகநயினார் பிள்ளை.

செல்வத்தாலெய்துபயன்.

(234-ம் பக்கத்தொடர்ச்சி.)

முதலாக எடுத்துக்கொள்ளப்பட்ட அறநிலைக்கொடையானது சிவகாருண்ணியம் கருதிக்கொடுக்குங் கொடை, பாசநீக்கத்துச் சிவப்பேறாகிய பரமுத்தி ஒன்றே கருதிக்கொடுக்குங் கொடையென இரண்டாய் விரிந்து, மேலும் பலதிறப்பட்டு விரியும். அவைகளெல்லாம், ஈண்டுள்ள பெரும்பாலார்க்குப் பயன் படாமை மாத்திரையேயன்றி மிகப்பெருகுமாதலின் அவற்றை எல்லாம் ஈண்டுப்பரக்க விரித்திலம். உடம்பை வருத்தி மேலெழாநின்ற பசி நோயினால் வருந்தி வருவோர்க்குப் பசிப்பிணியை நீக்கலும், தீராநோய், கூன், குருடு, முடம் முதலியவற்றாற் சீவனஞ்செய்ய இயலாத தரித்திரர்க்குக் கொடுத்தலும் முதலியன வெல்லாம் சிவகாருண்ணியம்கருதிக்கொடுக்குங் கொடையின்பாற் படும். இவைகளையெல்லாம் வரையறுத்தற்குஇன்றியமையா முதற்கருவியாயுள்ளகல்விகற்பித்தலாகிய வித்தியாதானம் சமயபரிபாலனத்தின் பொருட்டுச்சித்தாந்த சைவநூல்களைக்கிரமமாகக்கற்றுத் தம்மிடத்தேவரும் பக்குவமாணக்கர்க்கு அவற்றைப் போதிக்குஞ் சித்தாந்த சைவபோதகர்களுக்கு உவகையொடு கொடுத்தல், சிவஞானிகளுக் கன்னமூட்டல், ஞானசாரியர்க்கு உடல் பொருளாவி மூன்றையுந் தானஞ்செய்தல்முதலிய கொடைகளெல்லாம், ஒன்றற்கொன்று ஏற்றமுடையனவாய்ப் பரமுத்தி கருதிக்கொடுக்குங் கொடையின்பாற் படும். இவ்வறநிலைக்கொடையைக் கருதியன்றே ஔவையாரும் "அறஞ்செயவிரும்பு" எனமுதலிலே அருளிச் செய்தனர். முற்றத்துறந்தபட்டினத்தடிகளும்

" பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடை நடுவிற்
குறிக்குமிச் செல்வம் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

ஈற்றிலே சொல்லப்பட்ட உடலாதி மூன்றையுந் தானஞ்செய்தலொன்றை நீக்கி, ஏனைய அறங்களனைத்தினுஞ் சமயபரிபாலனஞ் செய்யுமறமே மிகத்தலையாய அறமாம். அது மகா ஞானிகளாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய சமயகுரவர்கள் மெய்கண்டதேவர் முதலிய சந்தானகுரவர்கள் முதல், குமரகுருபரசுவாமிக ளிறுதியாயுள்ள மகான்கள் செயல்களினாலும் அவர்களருமைத் திருவாக்குக்களினாலும் பெறப்படும். இவர்களுக்கெல்லாம் பரமாசாரியராகிய ஸ்ரீகண்டபரமசிவன் பணித்தருளிய கட்டளையும் அஃதேயாம். இங்ஙனமாதலினாலே சைவக்கூற்றின் முடிவாகிய சுத்தாத்துவித சைவசித்தாந்த நெறியினைத் தலைப்பட்டொழுகுவாராய்த், தம்மாட்டுவரும் பக்குவராயுள்ள மாணாக்கர்க்கு அந்நூற்பொருளைப் போதித்தலின் அதிசமர்த்துவாய்ந்துள்ள சித்தாந்த போதகர்க்குக் கொடுத்தலே தலையாய அறநிலைக்கொடையாம். அக்கொடையின்பயன் இத்துணைத்தென்று வகுத்துச் சொல்லமுடியாததொன்றாம். அது

"சிவஞானச் செயலுடையார் கையிற்றானந்
தினையளவே செய்திடினு நிலமலைபோற் பொலிந்து
பவமாயக் கடலிலழுந் தாதவகை யெடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுத்துத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோகந் தன்னிலுஞ்சா ராமே
நவமாருந் தத்துவ ஞானத்தை நல்கி
நாதனடிக் கமலங்க ணணுகுவிக்குந் தானே"

என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தினாலே நன்றாகச் சாதித்துப் பசுமரத்தாணிபோற் பதியுமாறு நாட்டப்படும். பின்னர் இதனை மறுக்கத்துணியும் ஆற்றலுடையார் வேறியாவர்? இந்நல்லிலக்கண மமைந்துள்ளார் ஒருவரிடைச் சென்று ஒருகாலத்தாவது "நமக் கிதனைக் கொடு" என்று ஒன்றனைக் கேட்கவே மாட்டார்கள். ஏனையர், அவர் குறிப்பினைத் தாமாகவே யுணர்ந்து, அவரிருக்கு மிடந்தேடி வலிதாகக் கொண்டுபோய் அன்போடும் உவகையோடுங் கொடுத்தல் வேண்டும். பற்பல கவடு

களைக் கொண்டு விரிந்து நிற்கும் விருட்சத்தைப் போலப், பலபாக மாகப் பிரிந்து பரந்து விரியும் இவ்வற நிலைக்கொடையுள், இங்கே மிகச் சுருக்கி விளக்கிய குறிப்புரை கொண்டு, ஏனையவற்றையும் உய்த்துணர்ந்து கொள்ளல் அறிஞர் கடனேயாம். இவ்வற நிலைக் கொடை யொன்றொழிந்த ஏனையஐவகைக்கொடைகளும், மக்களுயிர்க்கு உறுதிபயப்பனவன்றாதலின் ஈண்டவற்றை விரித்திலம்.

இங்ஙனமேயாக, இக்காலத்துள்ள செல்வருட் பெரும்பாலார், "ஆண்டோர் பேரின்ப முண்டென்பர் அதனை யார் கண்டார்" என மயங்கி, இம்மைச் சுகமொன்றனையே மதித்து உண்டுடுத்துக் களித்து, மாதர் சிற்றின்பத்தையே சுகித்துத் தம்போலொத்த மூடச் செல்வரைத் துதித்து, அன்னவரோடு மாத்திரங் கொண்டாடி, உலோகாயத மதத்தைச் சார்ந்தொழுகுவாராயினர். இவரால் இவர் பரிவாரத்தினர்க்கே யன்றி வேறியார்க்கும் யாதும் பயனின்றே யாதலின், மேற்கொண் டிவர் திறத் தியாதும் பேசாது அவரை இத்துணையி னொதுக்கி விட்டோமென்க. பெருஞ் செல்வருள்ளே வேறொரு சாரார், பாடுபட்டுத் தேடிய அப்பொருள் கொண்டு தாமு மொரு சுகத்தை யனுபவியாது, பிறருக்கு முதவாது, பொன் காத்த பூதத்தைப்போல அதனைத் திரட்டிவைத்து விட்டு மாண்டு போக, அப்பொருளெல்லாம், வழக்குகளிலும், துட்டர்களிட்டத்து மாக அழிவெய்தலைக் கண்கூடாகக்காண்கின்றனம். இவரும் பிறர்க்குப் பயன்படாதவரே யாதலின், இவரைக் குறித்தும் ஈண்டுவிரித்தலிற் பெரும் பயனின்றேயாம் இனி இவரொழிந்த ஏனையர் செயல்களைச் சிறிதாராய்வாம்.

முன்னே நன்னிலையிலிருந்து பின்னர்ப் பிராரத்தவினை வயத்தராய்த் தாழ்வடைந்த சிவபத்திமான்களாய்ப் பிறரிடஞ் சென்று தங்குறைகளை முறையிடற்கியலாத அபிமானம் பூண்டுள்ளாராயுள்ள தக்கவர்க்கு ஒன்றை அவர் குறிப்பினையறிந்து ஈதற்குச் சிறிதாவது ஒருப்படாத பெருஞ்செல்வர் சிலர், பிறர் தம்மை மதித்தல் வேண்டுமென்ற பொய்ப்புக ழொன்றே கருதித் தம்போலொத்த செல்வருக்குப் பெருந்தொகைப் பணத்தைக் கொடுக்கின்றார்கள். சிலர் விசேட தினங்களிலே அச்செல்வரை உவப்பித்தற் பொருட்

டும், தாம் அவர் மதிப்பையும் பெரும் புகழையும் பெறுதற் பொருட்டுமாகப் பெரும் பொருள் செலவிட்டு, விசித்திரப் பந்தர் சமைத்துத், தீபங்கள் வாணங்கள் முதலிய சிறப்புக்களோடு நடமாதரைக் கொண்டு நாட்டியமுஞ் செய்விக்கின்றார்கள். இவர், அற்ப நேரத்துக் களியாட்டயர்ந்து மகிழ்தற் பொருட்டுத் தம்பொருளைச் செலவு செய்தல்மட்டில் அமையாது, எளிய சனங்களிடத்து வரிவைத்தும் ஒரு தொகையைச் சேர்த்துக் கொள்கின்றனரே! இச் செல்வர்கள் வறிஞராயுள்ள தம் அயலார்க்கொரு கெடுதி நேரிடுங் காலத்து அவர் மீது சிறிதிரங்கித் தம் கடைக்கணோக்கமாவது செலுத்துவார்களா? இல்லையே!. வேறுசிலர், விவாகோற்சவ முதலிய வேடிக்கைகளுக்காகவும், முறை பிறழ நடைபெறுங் கோயிற் திருவிழாக் களுக்காகவும், திருப்பணிகளுக்காகவும் அளவிறந்த திரவியங்களை வாரியிறைக்கின்றார்கள். உயிரோடிருக்குங் காலங்களிலே தம்பெற்றோர்க்கு அன்னவஸ்திரங்களையாவது உதவ உடன்படாத பாதகர் சிலர், அவரிறந்த பின்னர் அந்தியேட்டி முதலிய அபரக்கிரியைகளிலே வட்டிக்குக் கொடுக்குஞ் செல்வப் பிராமணரை வருந்தியழைத்து மனங்கொண்டமட்டும் அவர்க்கே கொடுக்கின்றார்கள். பசியால் வருந்தி வந்து யாசிப்போர்க்கு ஒருபிடி சாதமாவது கொடுக்க உடன்படாத செல்வர் சிலர், குறித்த ஒரு தினத்தில், பல சனசமுகத்திலே, பெருந்தொகை அரிசி கொண்டு அன்னதானஞ் செய்கின்றோமென்று விருதுகூறி, ஏழைகளைத் தடிகொண்டோட்டி வெருட்டிவிட்டு, வன்மையோடு முன்னரே வருந் துட்டருக்குக் கொடுக்கின்றார்கள்.

கல்வி யறிவாற் சிறந்த பெரியோரைக் கண்டவுடன் அவர்க்கேற்ற மரியாதை செய்யவாவது பேசவாவதுடன்படாத சிலர், படிற்றொழுக்கம் பூண்டு பொருந்தாப் பொய்க்கதைகளைச் சாலத்தோடும் பேசிப் பொருள் பறிக்க வரும் வேடச்சாமிகளது உள்ளக் கருத்தை உள்ளபடி அறிந்து கொள்ளும் ஆற்றல் சிறிதுமின்றி, அப்பரமபாதகர்க்குத் தம்மனம் போனவாறு கொடுக்கின்றார்கள். "உழுகிற குண்டேபானல் உள்ளூரில் விலை போகாதா" என்றவாறு தமது சாலங்கள் உள்ளூரிலே பலியாமை கண்டு வேற்றூர் நோக்கி ஓடிவரும் வேடச்சாமிகள் பலராற் பலர் பழிக்கப் பட்டொழிந்தமை கண்டும், இன்னும் அன்னோர் சாலத்துட் சிக்கித் தம்மானத்தையும்

பொருளையும் அவத்தே யிழத்தலென்னகெடுதி! என்னமதியின்மை! "பாத்திர மறிந்து பிச்சையிடு; கோத்திர மறிந்து பெண்ணைக்கொடு" என்று நம்மூர்ப் பெண்கள் பேசும் பழமொழியின் கருத்தையாவது விளக்கிக்கொள்ளும் ஆற்றல் இவரிடத்துச் சிறிதேனுமமையவில்லையே! இவரென் செய்வர்! கல்வியறிவின்மையினாலே சைவ நூல்களிற் கூறப்படும் மெய்யடியா ரிலக்கணங்களை விளங்குமாற்றலின்றி, இத்தடி வேடரை அன்னவராகக் கொள்ளும் விபரீத விளக்கத்தினாலே மயங்கியிடர்ப் படுகின்றாரே யென்னில் "வேடச்சுவாமிகள்" என்னும் விஷயவாயிலாக, நாம் அவர் படிற்றொழுக்கத்தைக் குறித்தும், மெய்யடியாரிலக்கணங்களைக் குறித்தும் விரித்துத் தடை விடைகளாற் சாதித்து நிறுத்த உத்தேசித்திருக்கின்றோமாதலின் ஈண்டவற்றை விரித்தில மென்க.

சமய நூலுணர்ச்சியிலும்; ஒழுக்கத்திலும், சிவ பத்தியிலுஞ் சிறந்தவராய்ச் சமய விருத்தி செய்ய முயலுஞ் சித்தாந்த சைவ வித்துவான்களை ஒரு சிறிதாவது உபசரிக்கச்சிந்தியாத செல்வர்சிலர், கோயில் மட முதலிய கட்டுமாறு பணந்தண்ட வருவோர்க்கு நெய்யாறு பாலாறு பெருக உபசாரணையோடு உணவூட்டிப் பெருந்தொகைப் பணங்களையும் அவர் மனங்குளிருமாறு வாரியிறைக்கின்றனர். அன்னோரெல்லாம் விலாப்புடைக்கத் தின்று கொழுப்பேறி, அறிஞர்களை மதியாத இறுமாப்போடும் பெருந்தொகைப் பணத்தோடும் மகிழ்ந்து சென்று, தம்மூர் புகுந்து, யாதொரு சங்கடமுமின்றிச் சம்பாதித்துக்கொண்டு வந்த அத்திரைப்பொருள் கொண்டு கவலையாதுமில்லாது சம்பிரமமாக வாழ்கின்றனர் இதனால் திருப்பணிக்கு உதவுதல் குற்றமா மென்று கூறியதாகக் கொண்டு விபரீதார்த்தங்கொள்ளாதொழிக. கடவுளது சொரூப தடத்த லக்கணங்களிவை யெனவும், அவரை வழிபடும் முறையிஃதெனவு முணர்த்துஞ் சமய வுண்மைகளை விருத்திசெய்யச் சிறிதாவது சிந்தியாது கோயில் கட்டுதலொன்றில் மாத்திரங் கருத்தை வைத்திருப்பின் அக்கோயில்களிலே சென்று வழிபடுபவரில்லா தொழிந்து பிற்காலத்தவை வாளாவிருப்ப நேர்வதாகவும் வந்து முடியும். அஃதன்றி, "அறந் தலைத்தந்தவரும் பொருட்டாக்கிப் பிறர் பொருள்கொள்ளாப் பேரறம் பூண்டு" என்று நம்குமரகுருபர சுவாமிகளாற் றிரு

வாய் மலர்ந் தருளப்பட்ட, சிவபெருமான் றிருவாக்குப் போல் திகழும், அருமைத் திருவாக்கும் இங்கே நன்றாக ஊன்றிச் சிந்திக்கத் தக்க தொன்றேயாம். எவ்விலக்கண முடையார் கோயில் கட்டற்குரிய ரென்பதும், எவ்விதிகொண் டெவ்விடத்தது கட்டப்படல் வேண்டுமென்பதும் தடைவிடைகளால் விரித்துத் தனியே விளக்கப்பட வேண்டியனவாதலின் ஈண்டவற்றை விரித்தில மென்க. பழைய மடங்களெல்லாம் படும் பாடுகளையும், அங்கே நடக்கும் அக்கிரமங்களையுங்கண்டு கேட்டறிந்தார், மடத்தோடு மதம்பிடித்து மானமழிந்த சோம்பேறி மூர்த்திகளெல்லாங் கூடிக் கலாம் விளைத்துப் பல கெடுதிகளையுஞ் செய்தற்கு முழுமுதற்றுணையாயுள்ள இம்மடத்தார்க்கு உதவியுஞ் செய்வாரா?

தருமம் மனத்தின் கணுள்ளதே யன்றிச் செயலின் கண்மாத்திர மமைந்துள்ள தொன்றன்று. இக்காலத்துள்ள செல்வர்கள் அதனைச் சிறிதாவது சிந்திப்பதில்லை எம்மினுஞ் சிறந்த செல்வராயுள்ளார் இத்துணைப் பொருளைச் செலவுசெய்து இன்ன தருமத்தைச் செய்து பெரும்புகழ்படைத்தன ராதலின், யாம் அவரை வெல்லச் செலவுசெய்து, அவரினும் மேம்பட்ட புகழைப் பெறல் வேண்டுமென்று கடன்பட்டுச் செலவு செய்தலென்ன தருமம்? இடம்பாசாரிகளது சாலத்துட் சிக்கி அவர்க்குக் கொடுத்தலென்ன தருமம்? அபாத்திரர்க்குத் தானஞ் செய்தலென்ன தருமம்? தகுதியுஞ் சிரத்தையுங் கிரமமு மில்லாத பூசை திருவிழா முதலியவற்றைச் செய்தலென்ன தருமம்? சீவகருணையில்லாது செல்வாக்குள்ள பிறரது முகஸ்துதிக்காகக் கொடுக்குங் கொடை என்ன தருமம்? உபயோகமில்லையென்று நன்றாக அறிந்து கொண்டும், குடிக்கும் பாலைக் கமருளூற்றியவாறு, நமது கடமை தீர்ந்ததென்று தம்முட் சமாதானஞ் செய்துகொண்டு கொடுக்குங் கொடை என்ன தருமம்? இங்ஙனமேயாக நாம் ஆராய்ந்து கொண்டுவந்த செல்வர்களொருவரிடத்தாவது, அறிஞர்களாலிழித்து விலக்கப்பட்ட ஐவகைக் கொடைகளையேயன்றிக், தலைபாக விதந்தோதப் பட்டதாய், இருமைப் பயனையுமொருங்கே தரவல்லதாயுள்ள அறநிலைக் கொடையைக் காண்பதரிதேயாம். இச்செயல்களை உள்ளபடி உற்று யோசிக்குமிடத்து, இழிவாயுள்ள ஐவகைக் கொடைகளும் இவர்கள் பொருட்டாகத் தான் வகுக்கப்பட்டன வென்றே கொள்ளத்தக்கதாம்

(இன்னும் வரும்)

சு. சரவணமுத்துப்பிள்ளை.

யாழ்ப்பாண " உதயபானு " பத்திராதிபர்.

நவ இந்தியா.

முன்னுரை.

ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் நவீன சாதுக்களின் மேன்மை பெற்ற அநுபூதிச் செல்வரென்பது யாவரும் ஒப்புக்கொண்ட விஷயமேயாம். அம்மகான் நமக்குச்செய்த அரிய பெரிய விஷயங்கள் இவையெனக் கணக்கிடலரிது. பல பெரியோரேர்ப்ப அம்மகான் தேகவியோக மாயினராயினும் அவரது பெயர் அவரது கிரந்தங்களின் மூலமாக என்றென்றும் பொன்று உடம்புடையதாயிற்று. பின்வரும் “ மாடர்ன் இந்தியா ” என்னும் நவ இந்தியாவென்பது கல்கத்தாவில் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் சிஷ்ய வர்க்கங்களால் பதிப்பிக்கப்படும் ‘உத்போதனம்’ என்னும் மாசிக சஞ்சிகையில் 1899ம் ஆண்டு மார்ச்சு மாசம் பத்திரிகையில் விஷயதானம் செய்யப்பட்டதை ஸ்ரீ சுவாமிகளால் நிருமிக்கப் பட்ட இமயமலைச் சாரல் மாயாவதி ஆசிரமத்தார்களால் வெளியிடப்படும் ஸ்ரீ சுவாமிகள் ஞாடகப்பதிப்பு நான்காவது காண்டத்தில் மொழி பெயர்த்து அச்சிட்டிருப்பதோடு தனிப் பிரதியாகவும் உதவியுள்ளார்கள். இதனை ஒன்றுமறியா அடியேன் வாசித்த காலத்துத் தோன்றிய இன்பப்பெருக்கை யாவரு மார்ந்தும்பொருட்டு மாயாவதி மட காரியகர்த்தா அவர்களுக்குத்தெரிவிக்க அவர்கள் 9-10-09ல் அநுமதி கொடுத்ததுமன்றி பிரசுரம் செய்யப்படுவதில் மடத்திற்கும் ஒரு பிரதியனுப்ப உத்தரவிட்டார்கள்.

2. இம்மொழி பெயர்ப்பில் **VEDIC PRIESTS, PRIESTS** என்பன வாசகத்தை நோக்கவும், பின்னும் (பிராமணிய பவர்) என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டிருப்பதால் பிராமண மேன்மை, ஆதிக்கம் என மொழி பெயர்த்தேன். அதை பெரியோர் பொறுத்தருள்வாராக.

3. மகாகவிச்சக்கரவர்த்தியான கம்பரே தாமொன்றுமறியா மூங்கையேன்’ என்பாராயின் கேவலஸ்தனான அடிமை யாது அறியக் கூடும்? ஆகையால் ஆசையென்னும் முறடன் பின்னிருந்து தள்ளுகின்றபடியால் குற்றங் குறைகளிருப்பின் பெரியோர்கள் மன்னிப்பை நாடுகின்றேன்.

சோமசுந்தர தேசிகர்.

நவ இந்தியா

[விவேகாநந்த சுவாமிகளால் எழுதப்பட்டது.]

வேதப்பிராமணர்கள் தாங்கள் எக்ஞ மந்திரங்களை அறிவோம் என்ற செருக்கால் இறுமாப்படைகின்றனர். இந்த மந்திர பலத்தால் தேவலோகத்தினின்றும் தேவதைகள் இறங்கி, யாகத்திலிடப்படுகின்ற அவிஸையேற்று எஜமானர்களது அபீஷ்டத்தை நிறைவேற்றிச் செல்லுகின்றனர். இதனால் அரசனும் அவனது குடிகளும் உலகத்தில் வாழுமளவும் தாங்கள் நன்மையடைய இந்த பிராமணர்களைப் பார்த்தவண்ணமாயிருக்கின்றனர். சோமபானமாகிற இராஜா இப்பிராமணர்களால் பூஜிக்கப்பட்டு, அவர்களது மந்திரங்களால்வளர்க்கப்படுகின்றனன். இதனாலேயே தேவர்களுக்குப் பிரீதியான சோமபானம் தீக்ஷிதர்களால் ஆகுதிசெய்யப்படுவதால், தேவதைகள் அவர்களது அபீஷ்டங்களை நிறைவேற்றுகின்றனர். இவ்விதமாகத்தெய்வபலம் பெற்று மனுஷியபலத்தை எதிர்க்கின்றனர்; தெய்வபலத்தின் முன் மானுஷியபலம் எம்மட்டு? சகலத்திற்கும் இடமான இராஜன் கூட அவர்கள் வாயிலில் முழங்காலிடுகின்றனன். அவரது கடைக்கண் பார்வையே அதிக அநுகூலமானது; அவரது ஆசிர்வாதமோ எல்லாவற்றையும் விட தேசத்திற்கே நன்மை விளைவிக்கக்கூடியது. ஒருசமையம்கொலைஅழிவுமுதலியவற்றில்தலையிடும்படி அரசனை ஆக்ஞாபித்தும், சமயோசிதமான தகுந்த புத்திமதிகளைப் புகட்டி ஆப்தநேயராகவும், ஒருசமையம் அரசன் செவ்வனே சிக்கிக்கொள்ளும்படியாக விநயமாக மாயவலைகளைவீசியும் பற்பலவிதமாக இராச்சியாதிகாரங்களை உண்மையில்தானேசெலுத்தி அரசனை தனக்குக் கீழ்ப்படும்படி செய்கின்றனர். இவைகளெல்லாவற்றையும் காட்டிலும்தம்முன்னோர்தாம், தம்சந்ததியார்இவர்களுடையபெரும் கீர்த்தியும் இவர்கள் கைக்குட்பட்டன. ஏன்? இவர்களே புராணிகர்கள். (Historians.)

அரசன் சர்வாதிகாரியாகவும், தன்குடிகளுக்குப்பெற்றோர்களைக் காட்டிலும் பதின்மடங்கு சிரேஷ்டனாயும் அதிமேதாவியாகவுமிருக்கலாம்; இருந்தும் இப்பிராமணர் திருப்தி செய்யப்பட்டிராவிடின் இவர்களதுபெரும் கீர்த்தியும் சமுத்திரத்தில் பனித்துளிசேர்வதையொப்பக் காலகிரமத்தில் மறைந்துபோகிறது. அப்படிக்கின்றி மாரி

மழைபோன்று குருமாருக்கு வேண்டாமென மறுக்கும்படி கனகாபிஷேகம் செய்து அசுவமேதம் முதலியவைகள் செய்தவர்களின் பேர்கள் இப்பிராமணர்களுடைய ஆசீர்வாதத்தால் சரித்திரங்களில் மேன்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன. தேவர்களுக்கு அன்பனான பிரியதர்சி * தர்மாசோகனது பெயர் குருமார்களுக்கு மாத்திரம்தெரியுமேயொழிய பரிக்ஷித்து மகாராஜனின் புதல்வனான † ஜனமேஜயனது பெயர் ஒவ்வொரு வீட்டிலும் தெரிந்திருப்பதேசான்றும்.

தேசத்தை எதிரிகளினின்றும் காப்பாற்றவும் தானும் பரிவாரங்களும் இஷ்டபோகாதிகளை அநுபவிக்கவும், இவற்றைவிட பிராமணர்களாகிய தேவதைகளை வேண்டாம் வேண்டாமென்று சொல்லும்படி திருப்திசெய்யவும், பூமியிலுள்ள குளிரைச்சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக இடைவிடாது கிரஹிப்பதுபோன்று, அரசன் தன்னுடைய குடிகளிடமுள்ளவற்றைக் கவர்கின்றனன். அரசனுக்கு முக்கியமாக கறவைப் பசு வைசியர்களே.

இந்து அரசாட்சியிலாவது புத்த அரசாட்சியிலாவது குடிகள் இராச்சியபாரத்தில் தலையிட்டுத்தங்கள் நோக்கத்தைத் தெரிவித்திருப்பதாகத் தெரியவில்லை. ‡யுதிஷ்டரர்வாரணாவதத்தி லரசாட்சிசெய்தபோது வைசியசூத்திரர்வீடுகளைப்போய்ப்பார்த்ததும், ஸ்ரீஇராமபிரானை இராஜ்யபாரப் பொறுப்பையேற்கப்பேசியதும், சீதையைஒருவருமறியாமல் கானகத்திற் செல்லத்தூண்டியதும் உண்மையேயாயினும் இவர்கள் நேரில் இராஜ்யநிருவாகத்தின் பொறுப்பு ஏற்றதாகத்தெரியவில்லை. அக்காலத்தில் ஜனங்கள் நேரிடவும் ஒழுங்காகவும் வெளியிடத்தெரியாது பரிதபித்துக் கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட சக்தியென்று தங்களுக்கிருக்கின்றதெனக்கூட அறியும் சக்தியற்றவர்களாகவிருந்தனர். அக்காலத்தில் அவர்களிடம் அந்த சக்தியை ஒருமைப்படுத்தி வெளியிட வேண்டியதற்கு முயற்சி யாவது, அல்லது இஷ்டமாவது இருந்ததாக ஏற்படவில்லை; அப்படி இருந்திருக்குமாயின், அதனாலுண்டாகும் நீக்கமுடியாப் பலம் முதலியவற்றைக்கொடுக்கக் கூடிய குணமும் திறமையும் ஏற்படவில்லை.

---

* தர்மாசோகன்: புத்தசக்கரவர்த்தி. அவன்காளில்தான் புத்தமதம் தழைத்தது.

† ஜனமேஜயன் பாரதம் வெளிப்படுவதற்குக் காரணபூதன்.

‡ யுதிஷ்டர்ர்—தர்மபுத்திரன்.

இவைகள் சரியான சட்ட திட்டங்கள் ஏற்படாத காலா காணப்படவில்லை? இல்லை. இராசாங்கத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் ஒவ்வொரு விதமான சட்டதிட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இறைமாட்சி, சேனை, நியாய ஒழுக்கம், தண்டனை வெகுமதி இவற்றைப்பற்றி சவிஸ்தாரமாக எழுதப் பட்டிருந்தது. ஆயினும் இவைகளுக் கெல்லாம் ஆதிகர்த்தாவாக ஞானதிருஷ்டியுடைய ரிஷிகள் ஏற்பட்டிருந்ததுமன்றி அவர்களது முகரும் பெற்றிருந்தது. அவைகளில் இருபொருள் படக்கூடிய தொன்றுமில்லை யென நிச்சயமாகச் சொல்லலாம், இக்காரணத்தால், தாங்களே ஒன்று சேர்ந்து பொது ஜனங்களின் நன்மையின் பொருட்டு ஒரு காரியத்தை நிறைவேற்றவாவது, தன் குடிகளிடமிருந்து வசூலிக்கப்படும் இறையில் தங்களுக்கு பாத்திய முண்டென்று சேர்ந்து யோசனைபுரியவாவது, இராஜவருமானத்திலும் செலவிலும் தங்களுக்கு பொறுப்பு வேண்டுமென கேட்கக் கூடிய போதனைகளாவது, இருக்க சாத்தியமேயில்லை ஏன் அவர்கள் அப்படி எண்ணவேண்டும்? அவர்கள் நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் இருடிகளின் தெய்வபலம் பாத்தியமன்றோ?

இன்னும் சட்டதிட்டங்க ளெல்லாம் சுவடிகளில் ஏற்பட்டிருக்கின்றன. சுவடிகளில் எழுதப்பட்டவை களுக்கும், உலக நடைக்கும் ஏற்பட்ட வித்தியாசம் கணக்கிலடங்காதது. அநேகாயிர அக்னிவர்ணர்கள் * காலஞ் சென்ற பிறகுதான் ஒரு இராமச்சந்திர பிரபு அவதரிக்கின்றார்! அநேக இராசாக்கள் சண்டாசோகனை† ப் போன்றிருக்கின்றனர்.

தர்மாசோகர்கள் அரிது! தனது குடிகளை இம்சித்து இராச்சியபாரம்செலுத்தும் அரங்கசீப்பைக் காட்டிலும் குடியும் கோலும பிறிது அறியமுடியாமல் இராச்சியபாரம்செய்யும் அக்பரைப்போன்றோர் காண்பது அரிது!

---

* இவர் சூரிய குலத்தரசனுயினும சிற்றின்பத்தால் அழிவுற்றவர்.

† உலகத்தில் கீர்த்தி வாய்ந்த அசோகமஹாராஜன் முதலில் தன் சகோதரனைக்கொன்று சிம்மாதனமேறிக் கொடுங்கோன்மன்னனுக ஒன்பதாண்டு இராச்சியபாரம் செலுத்தியபின்னர் பௌத்தமதத்தைச் சேர்ந்து தர்மகாரியங்களைச் செய்து தர்மாசோகனெனப் பெயர்பெற்றான்.

தெய்வத்தன்மைபொருந்திய யுதிஷ்டிரர், இராமபிரான், தர்மாசோகன், அக்பர்போன்ற சக்கரவர்த்திகளின்கீழ் குடிகள் க்ஷேமத்தையும் லாபத்தையும் அடைந்தபோதிலும் பிறரால் உண்பிக்கப்படுபவனது கை எப்படிக்காலக்கிரமத்தில் தானே எடுத்துஉண்ணும் தொழிலை மறக்குமோ அஃதேபோலாகும். எந்த வழியிலும் பிறரால் காப்பாற்றப்படுபவனுக்குத் தன்னைக்காப்பாற்றிக்கொள்ளும் தொழில் ஒருநாளும் வெளிப்படாது. தம் பெற்றோர்களால் குழந்தையாகப் பாவிக்கப்படும்வரையில் திடசரீரியான வாலிபன்கூட குழந்தையே யாகிறான். ஆதிமுதற்கொண்டு குடிகள் தெய்வத்தன்மை பொருந்திய மன்னர்களால் பாதுகாக்கப்பட்டும் போஷிக்கப்பட்டும் வந்தபடியால், அவர்கள் சுவராஜ்யத்தின் விதிகள் இன்னதென அறிய வழியேற்படாமற் போயிற்று. அப்படிப்பட்ட ஜனங்கள் ஒவ்வொன்றிற்கும் அரசனையே சார்ந்திருந்தாலும் பொதுநன்மைக்கோ பாதுகாப்பிற்கோ உழைக்கக் கவலைப்படாமலும் முன்வாராததால் அவர்களிடம் இயற்கையி லமைந்திருந்த சக்தியையும் பலத்தையும் இழக்கலாயினா. இவ்விதமான சார்பும், காப்பும் வெகுநாள் நீடிக்குமாயின், ஒரு ஜாதியின் சிதைவுக்குக் காரணமாவதோடு அதன் அழிவும் தூரத்திலிருப்பதில்லை.

ஒரு தேசத்தின் இராச்சியபாரம் பெரியோர்களது ஞானதிருஷ்டியின் உணர்ச்சியால் ஏற்பட்ட சாஸ்திரங்களைக்கொண்டு உண்டான சட்டதிட்டங்களால் நடத்தப்படுமாயின், அப்பேர்ப்பட்ட இராச்சியம் தனவான், ஏழை, கல்விமான், மூடன், இராசன். குடி என்பதின்றி எல்லோருக்கும் நன்மையுண்டாகும்படி ஆளப்படுமென்பதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. இருந்தாலும் நாம் ஏற்கனவே உலகநடவடிக்கை எதுவரை சாத்தியமென்பதைக் காட்டினோம்.

மொழிபெயர்ப்புக் கர்த்தா,

சோ. தேசிகர்.

கல்யாணி.

[312-ம் பக்கத்தொடர்ச்சி.]

சங்கரன் அப்பேச்சைமறைத்து "அஃதிருக்கட்டும் அத்தான். ஒரு ராகம் ஆலாபனம் செய் பார்ப்போம். கிருஷ்ணசாமிக்கும் உன் பாட்டுக் கேட்க ஆசை. கேட்டு வெகு நாளாயிற்று." எனக் கிருஷ்ணசாமியும் "ஆமாம். எங்கே தோடி ராகம் ஆலாபனம் செய்து தாயுமானவரில் ஒன்று பாடு" என்றான். உடனே சுந்தரம்,

"அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது? சமயகோ டிகளெலாம்
தம் தெய்வம் எம்தெய்வம் என்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது? மேல்
கங்குல் பகல்அற நின்ற எல்லையுளதெது? அது
கருத்திற் கிசைந்த ததுவே.
கண்டனவெலாம்மோன உரு எளியதாகவும்
கருதி அஞ்சலி செய்குவாம்."

என்று பாடி முடிக்கவே, "யாரது? சுந்தரமா?" என்று ஓர் சத்தம் கேட்டது. யாவரும் அது கேட்ட திசையை நோக்கினார்கள். இதற்குள் சுந்தரம் "ஜோஸியத் தாதா கூப்பிடுகிறார்; நாழிகையாய் விட்டது. "போவோம்" என எல்லாரும் எழுந்து அத் தாதா வண்டை வந்து சேர்ந்தார்கள்.

தம் ஜபம் முடித்துவிட்டு இவர்கள் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்த ஜோஸியத் தாதா இவர்கள் வந்ததும் சுந்தரத்தைப் பார்த்து "உன்கூட இருப்பவர்கள் யார்? சங்கரனும் கிருஷ்ணசாமியுமா? கிருஷ்ணசாமி! எப்போதப்பா வந்தாய்? நீ பரீக்ஷை தேறியது கேட்டுச் சந்தோஷப்பட்டேன். என்னவோ போகட்டும். உன் தகப்பனார் பட்ட கஷ்டத்திற்கு இப்பொழுதாவது விடிவுகாலம் வந்ததே. அடிக்கடி அவன் ஆத்திரப் படுவன் 'அம்மாஞ்சி என்னால் உழைக்க முடியவில்லையே' என்று. உன் ஜனன ஜாதகத்தை நான் கணித்தபோதே சொல்லிவிட்டேன்: 'யோக ஜாதகம் தான். வித்தியாகாரகன் உச்சத்திலிருக்கிறான். லக்நாதிபதியும் மித்திரஸ்தானத்திலிருந்து சுபர்கள் வீக்ஷண்யமடைந்திருக்கிறான்; ஒரு குறையும் வராது' என்று சொன்னேன். அஃதிருக்கட்டும்; எத்தனை ரூபாய் வேலை உனக்குக்கொடுப்பார்கள்?" என, சுந்தரம், "சாதாரணமாக அறுபது ரூபாய்க்குக் குறையாமல் எடுத்தவுடன் கொடுப்பார்கள்" என்றான்.

"சரி போகட்டும். என்னவோ ஆயுசோடு இருக்கவேண்டும். உன் அகமுடையாள் ஜாதகமும் யோகஜாதகந்தான்." என்று தாதா சொல்லிவிட்டு, "சங்கரா! நாளைக்கு ஊருக்குப் போகவேண்டுமல்லவா? விடிய ஆறு நாழிகை மகரலக்நம், நல்லவேளைதான். பரஸ்தானமாவது இருந்து விட்டுப் புறப்படவேண்டும்." என்று கூறிச் "சரி! நீங்கள் இன்னும் சந்தி பண்ணவில்லையே! சீ! அப்படியிருக்கக் கூடாது. காரியத்தோடு காரியமாய் அரை நாழிகை வேலைதானே. நாலு காயித்திரி செய்தாற்கூடப் போதும்" என்று சொல்லித் தன் சம்புடத்தைத் திறந்து கொஞ்சம் விபூதி யெடுத்து ஒவ்வொருவருக்குங் கொடுக்க அதை வாங்கிக் கொண்டுபோய் அவர்கள் நெற்றியில் தரித்து சந்தியாவந்தனம் செய்து திரும்பிவந்தனர்.

இதற்குள் கோயில் மணிச்சத்தம் கேட்க எல்லாரும் ஜோஸியருடன் ஆலயம் சென்றனர். உடனே 'பம்' 'பம்' என்றசங்கநாதமும் 'டாம்' 'டாம்' என்ற நகராமுழக்கமும், 'டாங்' 'டாங்' என்ற மணி ஓசையும், 'ஹர' 'ஹர' என்ற பக்தர் கோஷமும் மலையினின்றும் எதி

றொலித்தன. சிவபிரான் சந்நிதியில் எல்லாரும் இருவரிசையிலும் நின்றனர். சிலர் கைகூப்பித் தேவாரம், திருவாசகம் பாடினர். சிலர் சிவபரமான சுலோகங்கள் சொல்லினர். வேதியர் வேத மோதினர். தாதியர் நடனமாடினர். சில வாலிபர்கள் "சுவாமி! பகவானே! பரீக்ஷை தேறவேண்டும். இரண்டு சிதறு தேங்காய் உடைக்கிறேன்" என்றும், சில பெண்கள், தேவியை நோக்கி "அம்மா! தாயே! எப்படியாவது என் மனம் குளிரச் செய்வாயாகில் பாலபிஷேகம் செய்கிறேன்" என்றும் பிரார்த்தித்தனர். சிலர் குழந்தைகளைக் கையிலேந்தி, "அதோ பாரு: உம்மாச்சி. சாமி! காப்பாத்தணும் இன்னு சொல்லு" என்று சொல்லிக்கொடுத்து அவைகளின் மழலைச் சொல்லைக் கேட்டு ஆனந்தமடைந்தனர். வேறு சிலர் தேகபரவசமாகித் தாண்டவமாடினர். கடைசியாக கற்பூர தீபாராதனை நடந்தது. எல்லாரும் 'ஹரஹர' வென்று கன்னத் திலடித்துக் கொண்டு கடவுளைத் துதித்து விபூதி பெற்று ஒவ்வொருவராயும், கூட்டங் கூட்டமாயும் வீடுசெல்ல ஆரம்பித்தனர்.

கூட்டம் கலைந்தவுடன் சந்நிதியில் பொன்னிறமான தேககாந்தியுடையவராய் நெற்றியில் விபூதி தரித்து கழுத்தில் தங்கக் குவளையோடு கூடிய ருத்திராக்ஷமாலை துலங்க காதுகளில் வைரக் கடுக்கன்கள் ஒளிவீச விரல்களில் பச்சைக்கல் மோதிரம் பளீரென மின்ன, சுமார் 40, 45-வயதுள்ள ஒருவர் நமது சங்கரன், சுந்தரம கிருஷ்ணசாமி ஜோஸ்யத்தாதா முதலியோர்களால் சூழப்பட்டு நின்றார். இவர்தான்சங்கரனுடையபிதாவாகிய இராமசுவாமிசாஸ்திரிகள் உடனே பட்டர் ஒருதட்டில் தேங்காய் மூடிகள், பழம், வெற்றிலை பாக்கு, அர்ச்சனைக் குங்குமம் புஷ்பம், அபிஷேக சந்தன மாதியவற்றை ஏந்திக் கொண்டு வரவும், பக்கத்திலிருந்த ஒருவர் கனஞ் சொல்லி முடித்தார். உடனே பட்டர் "ஈசுவர கிருபையால் புத்திர மித்திரர்களுடன் அபிவிர்த்தி யடைந்து நீங்கள் ஏற்றுக் கொண்ட தர்மத்தை சாசுவதமாய் நடத்திவரவேண்டும்" என்று புஷ்பத்தை எடுத்து அவர்களுக்கு மாலையாய்ப் போட்டுத் தட்டையுங் கையில் கொடுக்க அவர் வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டு எல்லோருக்கும் விநியோகித்து மீதத்தைச் சுந்தரத்திடம் கொடுத்தார்.

அருகிலிருந்த கனபாட்டிகள் சங்கரனைக்காட்டி "சாஸ்திரிவாள்! இந்தப் பையன் யார்?" என, "இவன் புத்திரன்" என்றார் சாஸ்திரிகள். பட்டரும் "நல்ல புத்திசாலி" இந்த வருஷம் பி. ஏ, தேறிவிட்டது. பொறுமை, அடக்கம், வணக்கம், ஆகா! எல்லாரிடத்திலும் மரியாதை எவ்வளவு பாருங்கள்" என்ன, கனபாட்டிகள், 'கேட்பானேன் பித்ருவத்புத்ர: அவன்குணங்களுக்கென்ன?' என்று சொல்லிமுடித்தார். உடனே எல்லாரு மெழுந்து வீடு சென்றார்கள்.

அத்தியாயம் 2.

சங்கரன், சுந்தரம், கிருஷ்ணசாமி மூவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அருகிலிருந்த ஓர் கல்யாணையின்மேல் ஒருவன் சாய்ந்துகொண்டிருந்ததாய்ச் சொன்னோமல்லவா? இவனது சுருங்கிய புருவமும் கீழ்நோக்கிய பார்வைகளும், இவன் அடிக்கடி விரல் நகத்தைச் சுண்டுவதும், கால்விரலால் மண்ணைக் கிண்டுவதும் இடையிடையேவிடும் பெருமூச்சும் இவன் ஏதோ ஆழ்ந்தயோசனையுடன் கூடியிருந்தான் என நன்கு தெரிவித்தன. அம்மூவரது சம்பாஷணையிலும் சற்றேனும் மனம்செல்லாது நின்றதை யோசிக்குமிடத்து அவனுள்ளம் வியாகூலத்தால் கலக்கமுற்றிருக்கவேண்டுமென்று தெரிகிறது. ஜோசியருடன் நடந்த சம்பாஷணையிலிருந்து கதைத் தொடக்கத்திற்குச் சற்றுமுன் அம்மூவருக்கும் அவனுக்கும் ஏதோ வாக்குவாதம் நடந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. அடிக்கடி உதட்டைக் கடிப்பதும், பெருமூச்சுவிட்டுக்கொண்டு "ஹூம்!! அப்படியா? ஒருகை பார்த்துவிடுகிறேன். இந்தச் சுந்தரத்தையும் சங்கரனையும்போல எத்தனையோ பேர்களைப் பார்த்தாய்விட்டது. இன்னும் எத்தனை பேர்களைப் பார்க்கப்போகிறேனோ? அடே! வேண்டாமடா! 'பாயிலிருப்பவன் தரையில் கிடக்கிறான்; தரையில் கிடப்பவன் பாயில் கிடக்கிறான்.' ஹூம்! இருக்கட்டும். எப்படியாவது இந்தக் கல்யாணியை—சரிபார்த்துக்கொள்வோம். இதனால் என்னவந்தாலும் சரி. எப்படியானால் தான் என்ன? கோமதி அத்தையோ நம்மிடத்தில் பிரியமாக இருக்கிறாள். கல்யாணிக்கும் நம்மேல் ஆசையுண்டென்று தான் தோன்றுகிறது. அப்படி இல்

லாமற்போனால் ஏன் அன்றைக்கு அவள்— போடா! போடா! மங்திப்பயலே—நீ பி. ஏ. தேறிவிட்டால் எனக்கென்ன? அவப்பன் அந்தசாத்திரி ஏதோசொன்னானும். என்னமோ பார்த்துக்கொண்டார்களாக்கும் ஊருக்கிளைத்தவன் பிள்ளையார்கோவிலாண்டி என்று. இவர்கள் இவ்வளவுபேரையும் நான் சந்தியிலிழுத்து விடாமற்போனால் என்பெயர் குப்புசாமி இல்லை. ஐயோ! இந்தச்சமையத்தில்சிதம்பரம் அன்றோ இல்லாமற்போனான். ஸ்லா! ஸ்லா! அடேடே, அவனிதற்குள் வந்திருக்கவேண்டுமே. ஜூலைமாதம்முதல் ஆறுமாதமாய்விட்டதே. இதற்குள் ‘ஜெயிலை’ விட்டு வெளியேறி இருப்பபன். ஆனால் சீ! சி! அவனை எங்கேயென்று காண்கின்றது. எப்படியாவது மதுரையில் நம்ம ‘கம்பெனி’ ஆடுகிறது என்று அவனுக்குத் தெரியாமலாபோகும் தன்னைப்போல வந்துவிடுவான். நாமும் சீக்கிரம் புறப்படவேண்டும். இந்தச் சனியன் நாளை தொலைந்துவிட்டானானால் நாளையே ஒருவார்த்தை கல்யாணியை நேரில் கேட்டு விடுகிறேன். இனிமேல் பயமென்ன புருஷனுக்கு? பயந்தால் காரியமாவதெப்படி? நம் இஷ்டத்தைத்தெரிவித்தால் சரிதான். நம்மையும் பார்க்கச் சங்கரன் அழகு சொட்டுகிறானே?” என்று பற்பல விதமாகத் தனக்குள் சொல்லிக்கொண்டே தானிருந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுக் கோவில்தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தான். (இன்னும் வரும்)

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B.A.,B.L.,

அக்பரின் காலக்ஷேபம்.

(302-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆத்மஞான, தத்துவஞான வழி நடத்துகை.
(Spiritual Guidance.)

எல்லாம் வல்ல கடவுளுடைய மாயாசக்தியால் இப்பிரபஞ்சம் வேறுவேறு தோற்றங்களோடும், பற்பல குணங்களோடும் நானாவித ஜாதி வித்தியாசத்தோடும் உத்பத்தியாய் நடைபெற்று வருகிறது.

மானிடர்களோ ஒருவரைப்போல் ஒருவர் நினைப்பதுமில்லை, நடப்பது மில்லை. பெரும்பான்மையோர் தங்கள் தங்கள் செயல்களைப்பற்றியே புகழ்ந்துபேசித் திரிவார்கள். மற்றவர்களுடைய நடவடிக்கைகளை இகழ்ந்து பேசிக் கண்டனம் செய்வார்கள். சிலர் பிறருக்குத் தீங்கு இழைப்பதிலேயே சந்தோஷம் அடைவார்கள். தீங்கு செய்யாவிடில் துக்கிப்பார்கள். மற்றும் சிலர் தங்களுடைய சுயநயம் என்பதைச் சற்றேனும் பாராட்டாமலே உலகத்திற்குப் பாடுபட்டு உழைக்கக் கருத்தாயிருப்பார்கள். இப்பற்பல குணத்தினர்களுக்கும், பற்பல நம்பிக்கைகளும், கோட்பாடுகளும் உண்டு. ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தோற்றும் சொற்பனங்களையும் ஜாலங்களையும் நிசமென்று எண்ணிச் சிந்தை மகிழ்வார்கள். ஆனாலும் அபூர்வமாகச் சிற்சிலர் ஒரொரு சமயம் ஆழ்ந்த சிந்தை உள்ளவர்களாய்த் தங்கள் நடை, உடை, பாவனை விஷய இன்பங்கள் முதலியவைகளைப் பரித்தியாகம்செய்து உலகியல்களை நீக்கிக் கண்களை உள் திருப்பி நோக்கி யோகம் செய்து அதன் பயனைப் பிரபஞ்சமே 'ஜாலம்' 'மித்தை' என்று தெளிவுறத் தெரிந்து ஞானக் கண்களால் சத்துச் சித்தாநந்தத்தைக் கண்டுகொள்வார்கள். ஆனால் மெய்ஞ்ஞான தீபமோ ஒவ்வொரு வீட்டிலும் பிரகாசிப்பதில்லை.

ஒவ்வொரு மனதும் உபதேசம் பெற்றுக்கொள்ளப் பக்குவப்பட்டதாக இருப்பதில்லை. கொஞ்சம் உழைத்துச் சிறிது ஞானம் அடைந்தவன் மற்றமானிடர்களைத் துஷ்ட, கொடிய விலங்கினங்கள் போல் எண்ணி மௌனமாய் இருந்துவிடுகிறான். அவனுக்கு ஞானம் முதிர்வடைந்து அவன் மன உல்லாசத்தினால் தன்னுடைய அனுபவத்தை ஏனையோருக்குச் சொல்லப்புகின், ஏனையோர்கள் அவனைப் பித்தன் என்றும், முட்டாள் என்றும் ஊன்மத்தனென்றும் திட்டித் தூரத்துவார்கள். "கோவணம் கட்டாத ஊரில் கோவணாண்டி பயித்தியக்காரன் அல்லவா?" சிலர் அவனை நாஸ்திகனென்றும், தெய்வ நிந்தனை செய்வோன் என்றும், கல்லால் அடித்து இம்சை செய்து ஒருசமையம் அவன் உயிரையும் வாங்கிவிடுவார்கள். இவை எல்லாம் உலக இயல்பே. ஆனாலும் தர்மம் தாழ்ந்து அதர்மம் ஓங்கி வளரும் காலத்தில் சர்வ தயாபரனாகிய பகவான் சர்வஜன ரக்ஷிப்புக்காகத் தன்னுடைய அம்சத்தை ஒரு மஹானிடம் புகுதச்செய்து அவனை

அர்சனுக்கு சகலவித ஞானங்களையும்புகட்டி ஜனங்களை நல்வழிக்குக் கொண்டுவரச் சகல அதிகாரத்துடன் திட்டம் செய்வார். தானே அவதார புருஷனாகத் தோன்றுவார். இது சகல சாஸ்திரங்களிலும் ஏற்பட்டுள்ளது. இதை அனுசரித்தே, இவ்வேளையில் நமது அக்பர் சக்கிரவர்த்தி அவதரித்தார் என்று சொல்லவேண்டும். இவர் பிறந்த காலத்தில் மகான்களாகிய ஜோதிட சாஸ்திர பண்டிதர்கள் இவர் தெய்வத் தன்மையை அறிந்து தங்களுக்குள் இவரை உத்சாகத்துடன் புகழ்ந்து பேசி ஆனந்திப்பார்கள். நம்முடைய சக்கரவர்த்தி தம் தெய்வத்தன்மையை அறிந்துள்ளாராயினும் அன்னியர்கள் அறியாவண்ணம் தாம் சாமான்யர் போலவே நடித்துக் காட்டிக் கொள்வார். இப்படியிருந்தாலும் பகவான் ஆக்ஞையை மீறிச் செல்பவர் யார்? அவர் திருஉள்ளக் கட்டளைப்படி நடந்தேதீரவேண்டியதல்லவா? சக்கரவர்த்தி தன் குழந்தைப் பருவத்திலேயே—தானும் அறியாதகாலத்திலேயே—பிறர் ஆச்சரியப்பட்டு வணங்கும்படியான சிற்சில அற்புத விநோத லீலைகளைப்புரிந்தார். இவர் எவ்வளவு மறைத்து அடக்க முயன்றும் இவரது தெய்வத்தன்மை அடங்காமலே அவர் செய்யும் காரியங்கள் இவருடைய நடவடிக்கைகள் முதலியவற்றால் எவரும் எளிதில் அறியும்படி வெளிப்பட்டது. இதையுணர்ந்து " நாம் செய்வதொன்றில்லை எல்லாம் பகவான் திருவுள்ளப்படிதான் நடக்கும். பகவான் ஆக்ஞையை சிரசால் வகித்து அதன்படி நடக்கவேண்டும். நம்மை ஒரு கருவியாக நியமனம் செய்து இருக்கிறார். நாம் அறிந்ததை எல்லாருக்கும் வெளியிடுதல்வேண்டும். " என்று தீர்மானித்து நன்னெறி மார்க்கம் உபதேசிப்பாராயினர். சந்தேகத்தால் விசார சாகரத்தில் முழுகிக் கிடப்பவரை சந்தேகம் தெளிவித்துக் கைதூக்கிவிடுவார். சிற்சிலருக்கு அவரவர் எண்ணப்படிக்கும் இஷ்டப்படிக்கும் பாடம் சொல்வார். வேறு சிலருக்கு அவர்களுடைய கோரிக்கைகளுக்கு விரோதமாகப்போதிப்பார். சக்கரவர்த்திக்கு அநேகர் சீடர்கள். தபஸ்விகள், சன்னியாசிகளிடம் ஒரு மண்டலம் (45 நாள்) பட்டினி கிடந்து சிசுருஷை புரிந்து கற்றுக்கொள்ளக்கூடிய வித்தைகளை ஒரே நாளில் இவருடைய சன்னிதி விசேஷத்தாலும், ஸ்பரிசத்தாலும், போதனாசக்தியாலும் அறிந்து கொள்வார்கள். உலகத்தைத் துறந்த சன்னியாசிகள், பரதேசிகள்,

கியாலண்டர்கள் (புருவமயிரைச் சிரைத்துக்காஷாயம்பூண்டு திரியும் ஒருவகை மகமதிய பக்கிரிகள்), தத்துவ சாஸ்திர பண்டிதர்கள், மஸ்தான்கள், சூபிகள், துருப்பு சிப்பாய்கள், யுத்தவீரர்கள், வியாபாரிகள், வைசியர்கள், பயிரிடுவோர்கள், வேளாளர்கள், கைத்தொழில்புரிவோர்கள் பற்பல தேசங்களிலிருந்து நானாவித ஜாதியாரும் சக்கரவர்த்தியிடம் வருவார்கள். ஒவ்வொருவரும் ஏதாவது கொஞ்சம்கொஞ்சம ஞானக்கண் திறக்கப்பட்டு ஞானவித்தையுடன் போவார்கள்.

நானுவித அந்தஸ்தும், யோக்கியதையும் உள்ள நானு ஜாதியாரும் தங்கள் தங்கள் கோரிக்கை நிறைவேற வேண்டுவதாய் இருந்தால் தெய்வத்திற்குப் பதிலாகச் சக்கரவர்ததிக்குப் பிரார்த்தனை செய்வார்கள். அப்படிச்செய்வதால் தங்களுடைய சங்கடங்கள் நிவிர்த்தியாகும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. அப்படி அவர்கள் கோரியவை கைகூடிவந்தால் அவர்கள் சக்கரவர்த்திக்காகப் பிரார்த்தனை செய்துவைத்த சாமான்கள், பொருள்களெல்லாம் அவர்முன் கொண்டுவந்து சமர்ப்பிப்பார்கள். வெகுதூரமிருந்துஇம்மாதிரி அர்ப்பணம் செய்யமுடியாதவர்கள், சாமான்களை சக்கரவர்த்தியை உத்தேசித்து தர்மத்தில் உபயோகப்படுத்திவிடுவார்கள். சக்கரவர்த்தி இராச்சியங்களைச் சுற்றிப்பார்ப்தற்கும் இதர இராச்சியங்களைப் பிடிப்பதற்கும், வேட்டையாடிக் களிப்பதற்கும் ராஜதானியைவிட்டு வெளியே புறப்படுவதுண்டு. அக்காலங்களிலெல்லாம் ஒவ்வொரு நகரத்திலிருந்தும். பட்டணத்திலிருந்தும், கிராமங்களிலிருந்தும் ஏராளமாக ஆண் பெண் அடங்கலும் தாங்கள் தாங்கள் பிரார்த்தனை செய்துவைத்திருந்த பொருள்களையெல்லாம் சக்கரவர்த்திமுன் அர்ப்பணம் செய்யத் தவறமாட்டார்கள்.

(இன்னும் வரும்)

ம. ஜகதீசையர்.

313

ஹரிவம்சம்.

அத்தியாயம் 120.

நரகாசுரவதம்.

புண்டரீகாக்ஷனாகிய ஸ்ரீ கண்ணபிரான், ருக்ஷ்மியை வதம் புரிந்து துவாரகாபுரியை நோக்கிச் சென்றார். தனக்கு அகப்பட்ட தனத்தையும் ஆபரணங்களையும் ராட்சஸர்கள் மூலமாய் துவாரகாபுரியிலுள்ள தன் அரண்மனைக்கு அனுப்புவித்தார். ஆயினும் சாக்ஷாத் சிவபெருமானிடத்தில் வரம் பெற்றிருந்தவர்களான பராக்கிரமம் மிகுந்த சில அசுரர்களும், தானவர்களும், தைத்தியர்களும் ஸ்ரீ கேசவனுக்கு இடையூறுசெய்ய, அவர் அவர்களையும் சங்கரித்தார்.

அப்பால் ஸ்ரீமாதவன் துவாரகையில் வசித்துவரும் நாளில், தேவராஜன் சத்துருவும் தேவர்களுக்குப் பெரும் பீதியை உண்டு பண்ணினவனுமான நரகன், என்ற ஒரு மகா அசுரன் ஸ்ரீ கண்ணபிரானுக்குப் பற்பல இடுக்கண் இழைத்து வந்தான். பூதேவியின் புத்திரனான நரகாசுரன் மூர்த்திலிங்கம் என்ற இடத்தில் வசித்துக் கொண்டு தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும் பலவிதத்திலும் இடையூறு செய்தான். ஒருகாலத்தில் பிராக் ஜோதிஷ்புரத்திற்கு அரசனானநரகன் ‘கசேரு’ என்ற இடத்திற்கு ஓர் அந்தணவடிவம் எடுத்துச்சென்று அங்கிருந்த ‘துவஷ்டா’ வின் புத்திரியாகிய (சதுர்தசி) என்பவளை பலாத்காரமாய் அபகரித்து அவளைக்கற்பழித்தான். சிறிதேனும் பயமும் துக்கமும் இன்றி ராக்ஷஸர்களையும், தைத்தியர்களையும், தானவர்களையும் நோக்கி, “ ஹே! தானவர்காள்! இன்று முதல் தேவர்களிடத்திலும் மானிடர்களிடத்திலும், பூலோகத்திலும் சமுத்திரங்களிலுமுள்ள எல்லா ரத்நங்களையும் என்னிடத்திற் கொணர்ந்து சேர்ப்பியுங்கள்.” என்று சொல்ல ‘அவ்வாறே’ அவர்கள் பூமியிலுற்ற நானாவிதமான ஐசுவரியங்களையும் வஸ்திரங்களையும் கொணர்ந்து தங்கள் அரசனிடம் கொடுத்தனர். மேலும் பலிஷ்டனான நரகாசுரன் தேவ, கந்தர்வ, மனுஷ்ய, அப்ஸர ஸ்திரிகளில் 16100 பதிவிரதாசிரோமணிகளை ‘மாரு’ என்ற தைத்திய வேந்தனது ராஜ்யத்திற்குச் சமீபத்திலுள்ள அழகாபுரத்தில் மணிபர்வதத்தின்மேல் கட்டப்பட்டிருந்த ஓர் கர்ராக்ருகத்தில் சிறை வைத்திருந்தான்.

 2548

வித்தியாபாநு.

மணி பர்வதத்தில் மருவின் புத்திரிகள் பதின்மரும், மேற்சொல்லிய 16,100 மடந்தையர்களும் இன்னும் அநேக ராக்ஷஸ ஸ்திரீகளும் பிராக் ஜோதிஷ வேந்தனாகிய நரகன் ஆணைப்படி நடந்துகொண்டு அவனைப் பூஜித்து வந்தார்கள். மகாதேவருடைய பிரஸாதம் பெற்றவனாகிய இந்த அசுரனுடைய பட்டணமானது கடற்கரையை அடுத்திருந்தது. இவன்செய்த பராக்கிரமச் செயல்களோவெனில், எல்லா அசுரர்களும் ஒன்றுகூடி முயன்றாலும் செய்யமுடியாதனவாம். பூமி புத்திரனாகிய "பௌமன்" என்ற நரகாசுரன் அணிந்திருந்த குடைகள் தேவ மாதாவாகிய "அதிதி" இடமிருந்து திருடிக்கொண்டு வரப்பட்டவை. யுத்தத்தில் மகா கோர சொரூபிகளான நான்கு துவாரபாலகர்கள் அவனிடத்திலிருந்தார்கள். அவர்கள் ஹயக்ரீவன், நிசுநதன், பஞ்சநதன், (ஆயிரம் புத்திரப் பேறு பெற்ற) முரு என்ற நால்வர்களுமாம். தர்மிஷ்டர்களுக்குச் சத்துருக்களான இந்நால்வரும் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கத்தக்கவர்கள். நிற்க.

இந்த நரகாசுரன் நிமித்தமாகவே, சங்கு சக்ரக தாதரனாய் கட்கபாணியாய் இராநின்ற ஜநார்த்தநன் விருஷ்ணி குலத்தில் வசுதேவனுக்குப் புத்திரனாய் அவதரித்தார். தேவர்கள் எல்லாரும் தீர்க்காலோசனைசெய்து பெரிய கடலால் சூழப்பட்ட துவாரகாபுரியை புருஷோத்தமனாகிய மாதவனுக்கு ராஜதானியாக ஏற்படுத்தினார்கள். இந்தத் துவாரகா பட்டணமானது ஐந்து பர்வதங்களோடும் கூடியதாய் தேவேந்திரன் தலைநகராகிய அமராவதி என்ற பட்டணத்திலும் சிறந்து விளங்கியது. அதிலுள்ள சபாமண்டபமானது "தசார்ஹம்" என்ற பெயருடன் கூடியதாய் "ஸுதர்மா" என்ற தேவசபாமண்டபம் போன்று ஒரு யோஜனை விஸ்தீரணம் உள்ளதாகவும் ஸ்வர்ணகனிசுமான பெரிய வாயில்கள் உள்ளதாயும் இருந்தது. அந்த ராஜசபையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர்களும், விருஷ்ணி குலத்தலைவர்களும் ராஜநீதி செலுத்திவந்தனர்.

(இன்னும் வரும்)

சி. நாராயணசாமி ஐயர் **B. A., L. T.,**

சமாசாரக்கொத்து.

சில மாதங்களுக்கு முன் பிஷாவாரில் கண்டெடுக்கப்பட்ட ஸ்ரீ புத்த பகவானின் அஸ்திச்சாம்பலை பர்மா நாட்டைச்சேர்ந்த மாண்டலே நகரத்திற் கொண்டு போய் வைத்து விடுவதாகக் கடைசியாய்த் தீர்மானமாயிருக்கிறதாம்.

* * *

மதுரை ஜில்லா நம்புதாலி கிராமத்தில் 87-குடித்தனக்காரர்கள் வீட்டில் அவ்வூர் மகமதியர்கள் நெருப்பு வைத்து விட்டதால் அவர்கள் செலவில் அங்கே தண்டப் போலீஸ் வைப்பதாக சர்க்கார் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள்.

* * *

லார்டுமின்டோ மீது வெடிகுண்டெறிந்தவனைக் கண்டு பிடித்துக் கொடுப்பவருக்கு ஐயாயிரம் ரூபா இனாங்கொடுப்பதாகக் கவர்ன்மென்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

* * *

ஜனவரிமீ 22உ மாலை $5\frac{1}{2}$ மணிக்கு ஹைக்கோர்ட்டில் ரகஸ்யப் போலீஸைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஷம்ஸுல் ஆலம் என்பவர் ஒரு வங்காளி வாலிபனால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் ஆதிமுதல் அலிப்பூர் வெடிக்குண்டுக் கேஸ்விசாரணை விஷயமாகச் சம்பந்தப்பட்டவராம். இவர் அச்சமயம் ஐக்கோர்ட்டில் ஜஸ்டிஸ் ஹாரிங்டன் முன்பு நடக்கும் அலிப்பூர் வெடிக்குண்டு கேஸ் அப்பீல் சம்பந்தமாக அட்வகேட் ஜெனரலுக்குத் தகவல் கொடுத்துக்கொண்டிருந்தார். கோர்ட்டு முடிந்தவுடன் வெளியே வந்து பிராஸிகியூஷன் வக்கீல்களுடன் பேசிக்கொண்டிருக்கையில் அவ்வாலிபன் இவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றானாம். இவ்வாலிபனின்பெயர் ஜோதீந்திரநாத தக்த குப்தா. இவனுக்கு வயது 18. இவன் மிர்ஸாப்பூர் தெரு 61-ம் நெம்பர் வீட்டில் வசிப்பவனாம். இதில்தான் "பாணிக்" அச்சியந்திர சாலையும் இருக்கிறதாம். கொலை செய்தவனைக் கைது செய்தவுடன் பேரைக்கேட்டபொழுது சொல்ல மறுத்ததுமன்றி, நீங்கள் என்னை உங்கள் இஷ்டப்படி என்ன வேணுமோ செய்யலாம் என்றானாம். சில தினங்களுக்குமுன் இவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுத் தூக்கப்பட்டான். வாலிபர்கள் இப்படிப்பட்ட அக்கிரமச் செயல்களை நீக்குவார்களாக.

* * *

ஜெனவரிமீ 5உ கான்ஸ்டாண்டி நோபிளிலிருந்துவந்த ஓர் தந்தி ஹெட்ஜாஸ் என்னுமிடத்தில் பெய்த பெரு மழையால் உண்டான வெள்ளப்பெருக்கானது மெக்காவின் மசூதியையிருந்தவிடம்தெரியாமல் மூடியதெனக் கூறுகின்றது. மைவெள்ளத்தால் ஒரு வீடு இடிந்து விழுந்து 8 மனிதர்கள் உயிர் துறந்தனர். மெக்கா இருப்புப்பாதைத் தொடருக்கு இந்த ஜலப்பெருக்கால் விளைந்த நஷ்டம் அதிகமாம்.

புத்தகக் குறிப்பு.

ஞானரதம்:—இந்நவீனநூல் புதுவை ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியாரவர்களால் எழுதப்பெற்றது. மனத்துயரை மாற்றி மகிழ்ச்சிவீட்டில் ஏற்றுதற்குத்தக்க வசனநூல். இதன்விலை அணா 8 புதுவை சூரியோதயம் ஆபீஸில் விலைக்குப் பெறலாம்.

கண்ணம்மாள் அல்லது பஞ்சாயத்து நாடகம்:—இது ஸ்ரீமத் உ. வே. திரு ஸா. இராகவாசாரியாரவர்களால் எழுதப்பெற்று, திருவாதி ஆர். நடேசய்யர் அவர்களால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பெற்றது. "கோயிற்பூனை தேவர்க்கஞ்சாது" என்ற பழமொழிக்கிலக்கான தர்மகர்த்தர்களின் அக்கிரமங்களைக் கண்டித்து நல்வழிப்படுத்துஞ் சிறப்புள்ளது. இதன்விலை அணா 6. வேண்டியவர்கள் நாகபட்டினம், ஸ்காட்டிஷ் பிராஞ்சுப்பிரஸ், மானேஜரிடம பெற்றுக்கொள்ளலாம்.

தெய்வபக்தி விவேகவிளக்கம்:—பாலப்பாளையம தங்கக் காஜீம் அவர்களியற்றிய இந்நூல், கடவுளில்லையென்று கூறும் நாத்திகா கூற்றை மறுத்துக்கூறுவது.

ஸ்ரீ சங்கரவிஜயம்:—இது இப்பெயர்வாய்ந்த வடமொழிநூலையாராய்ந்து தமிழில் மொழிபெயர்த்துச் செய்யுளாக்கப்பட்டது. இதனையாக்கியோர் மதுரை செயின்மேரிஸ் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ மு. கோவிந்தசாமியய்யரவர்களாவர். ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் உண்மைச்சரித்திரத்தைத தெரியவிரும்புவார்க்கு உபகாரமாகத்தக்கது. இதன்விலை ரூ 1

இவைபோன்ற தமிழ்நூல்கள்யாவும் தமிழ்நாட்டுக்கு நலம் புரிபவையென்றே கருதலாம்.

ஸ்ரீ பார்வதி பரமேசுவரர் படம்:—இது மிக்க அழகுவாய்ந்து சிற்பசாஸ்திர விதிக்கிணங்க பளபளப்பான ஓர் கெட்டிக்காகிதத்தில் அவ்வவ்விடங்களுக்குப் பொருத்தமுள்ள பலவர்ணங்களால் அமைக்கப்பட்டு விளங்குவது. பஜனைக்கூடம், பூஜாக்கிருகம் முதலிய இடங்களில் வைக்கத்தக்கது. இதனை அச்சிட்டனுப்பிய திருததுறைப்பூண்டித்தாலூகா அருந்தவம்புலம் ஸ்ரீ S. சந்திரசேகரம்பிள்ளை அவர்களுக்கு வந்தனமளிக்கிறோம். இதன் விலை ரூ 1—4—0

பத்திராதிபர்.